ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும நாளை (4-5-1995) காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

121. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஆண்டறிக்கையும், கணக்குகளும். (1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (மத்தியச் சட்டம் 6/1974) 39(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

160. மானியக் கோரிக்கை எண் 23-கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

161. மானியக் கோரிக்கை எண் 46--செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

162. மானியக் கோரிக்கை எண் 21--மீனளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

163. மீனளத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

164. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினைந்தாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).